22.07.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 24 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு



மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 24 ஆயிரம் கன அடியை செவ்வாய்க்கிழமை தாண்டியது. கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், கபிணி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து உபரி நீர் காவிரியில் வெறியேற்றப்படுகிறது. உபரி நீர்வரத்துக் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு செவ்வாய்க்கிழமை காலை 18,945 கன அடியாக அதிகரித்தது. இது, மாலையில் 24,752 கன அடியாக அதிகரித்தது.

நீர் வரத்துத் தொடர்ந்து அதிகரித்து வருவதால், திங்கள்கிழமை காலை 87.18 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம், செவ்வாய்க்கிழமை மாலை 88.80 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில்

மேட்டூர் அணையின் நீர் மட்டம் சுமார் இரண்டு அடி உயர்ந்துள்ளது. மேட்டூர் அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருவது காவிரி டெல்டா விவசாயிகளையும், மேட்டூர் அணை மீனவர்களையும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. நாள் ஒன்றுக்கு 2 டி.எம்.சி தண்ணீர் மேட்டூர் அணைக்கு வருவதால், அணையின் நீர் மட்டம் ஒரு வார காலத்தில் 100 அடியை எட்டும் வாய்ப்புள்ளது.

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**



தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரியாக இருக்கும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். அடுத்து வரும் நாள்களில், மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களான தேனி, கோவை, நீலகிரி ஆகிய இடங்களில் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மேலூர் பகுதியில் சாரல் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

மேலூர், அழகர்கோவில், அப்பன்திருப்பதி, சத்திரப்பட்டி கொட்டாம்பட்டி சுற்றுவட்டாரத்தில் செவ்வாய்க்கிழமை மாலை சுமார் ஒருமணிநேரம் சாரல்மழை பெய்தது. நீண்ட நாள்களுக்குப் பிறகு மழைபெய்தது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கள்ளந்திரி மதகுவரையிலான பெரியாறு-வைகை இருபோக சாகுபடிப் பகுதிகளுக்கு கடந்த 15-ஆம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது நாற்றுவிடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இம்மழை விவசாயப் பணிகளுக்கு உதவியாக உள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

வாரச்சந்தைகள் மூடல்; விவசாயிகள் அவதி: மதுரை மாவட்டத்தில் மேலூர், வாடிப்பட்டி உள்ளிட்ட பல்வேறு வாரச்சந்தைகளில் கால்நடைகளை வாங்கிச்செல்ல கேரள வியாபாரிகள் வரவில்லை. இதனால், கால்நடை விற்பனை முற்றிலும் பாதித்துள்ளது.

விவசாயப் பணிகள் துவங்கும் தருணத்தில் கால்நடைகளை விற்கவோ, வாங்கவோ முடியாமல் விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். எனவே கால்நடை சந்தைகளை தொடர்ந்து நடத்தவேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**வேளாண் விளைபொருள் விற்பனை சட்டத்தை முறையாக பின்பற்ற வேண்டும்**

வேளாண் விளைபொருள் விற்பனை சட்டத்தை முறையாக பின்பற்ற வேண்டும் என்று தமிழ்நாடு உணவுப்பொருள் வியாபாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. இதுகுறித்து சங்கத்தின் தலைவர் எஸ்.பி.ஜெயபிரகாசம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு வேளாண் விளைபொருள்கள் விற்பனை (ஒழுங்குப்படுத்தும்) சட்டத்தின்படி அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை

விற்பனைக் கூடத்திற்கு வெளியே வணிகம் செய்பவர்கள் உரிமம் வாங்க வேண்டிய கட்டாயம் இல்லை. அறிவிக்கப்பட்ட அங்காடி பகுதிக்கு வெளியே விற்பனை செய்யும் வணிகர்கள் யாரும் ஒழுங்குமுறை விற்பனைக்கூட அலுவலர்களின் அதிகார வரம்புக்குள் வருபவர்கள் அல்ல. ஆனால், மதுரை, தேனி மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் அறிவிக்கப்பட்ட அங்காடி பகுதிக்கு வெளியே வியாபாரம் செய்யும் சிறு வணிகர்களை உரிமம் எடுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர். இதனால் சிறு, குறு வணிகர்களுக்கு வியாபார ரீதியாக சில பிரச்னைகள் எழுந்துள்ளன. சட்டங்கள் முறையாக பின்பற்றப்பட்டால் அரசுக்கு லாபம் ஏற்படும் வகையில், தற்சமயம் வசூலிக்கப்படும் சந்தைக் கட்டணத்தை போல் ஐந்து மடங்கு சந்தைக் கட்டணம் வசூலாகும் என்பதை 1999 ஆம் ஆண்டிலிருந்தே சங்கம் வலியுறுத்தி வருகிறது. இதுகுறித்து 2006 ஆம் ஆண்டிற்குள் செயல்படுத்துவதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதுதொடர்பாக எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதுபோன்ற நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டாமல், சிறு, குறு வணிகர்களின் தொழிலை பாதிக்கும் செயலில் விற்பனைக்கூட அதிகாரிகள் செயல்படுவது முறையல்ல. இதுகுறித்து அரசு விரைவில் தெளிவான முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மானிய விலையில் சூரிய உலர்த்திகள்: விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

வேளாண் விளை பொருள்களை உலர்த்தும் சூரிய உலர்த்திகளை மானிய விலையில் பெற, விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வேளாண் விளை பொருள்களைப் பதப்படுத்தவும், ஈரத்தன்மையை உலர்த்தவும் சூரிய உலர்த்திகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இதன்

மூலம் மிளகாய், வாழை, தேங்காய், காய்கறிகள், கறிவேப்பிலை, முருங்கை போன்ற விளை பொருள்களை இலகுவாக உலர்த்தலாம். இதன் விலை, அனைத்து வரிகளும் உள்பட ரூ.3.85 லட்சமாகும். இதற்கு, அரசு சார்பில் ரூ.1.84 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. சூரிய உலர்த்திகள் தேவைப்படும் விவசாயிகள், காஞ்சிபுரம், மதுராந்தகம், நந்தனம் உபகோட்டத்தில் வேளாண் செயற்பொறியாளர்களை அணுகலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**பரமக்குடி உழவர் பயிற்சி மையத்தில் சிறுதானிய சாகுபடி பயிற்சி**

வேளாண்மை சீரமைப்புத் திட்டத்தின் கீழ், பரமக்குடி உழவர் பயிற்சி மையத்தில், விவசாயிகளுக்கான சிறு தானிய சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமுக்கு, வேளாண்மை உதவி இயக்குநர் ச. கண்ணையா தலைமை வகித்தார். வட்டார விவசாயிகள் ஆலோசனைக் குழு தலைவர் சி. காயாம்பு முன்னிலை வகித்தார். பயிற்சியில், வேளாண் ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் எஸ். சக்திவேல் கூறுகையில், நிலத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பயிர் சாகுபடி செய்வது மற்றும் சுழற்சி முறையில் பயிர் செய்வதன் அவசியம் குறித்தும் விளக்கிப் பேசினார்.

மேலும் இதில், வறட்சியை தாங்கக்கூடிய, வயது குறைவான, பூச்சி நோய் தாக்குதலிலிருந்து பாதுகாப்பது மற்றும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற சிறு தானியங்கள் சாகுபடி செய்யலாம்.

சிறுதானியங்களில் உள்ள சத்துகள், மருத்துவ குணங்கள், இந்த உணவுகளை உண்பதால் ஏற்படும் மருத்துவ நன்மைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அட்மா துணை திட்ட இயக்குநர் ஆர். சேகர், வேளாண்மை துணை அலுவலர் ஆர். தனதுரை, தொழில்நுட்ப

வல்லுநர்கள் செ. முரளி, கா. சிவக்குமார், உள்பட பலர் கலந்துகொண்டனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் மா. ஜெயப்பிரதா நன்றி கூறினார்.

**முதுநிலை வேளாண் படிப்புகளுக்கு கோவையில் இன்று நுழைவுத் தேர்வு**

முதுநிலை வேளாண்மை படிப்புகளுக்கு கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை (ஜூலை 22) நுழைவுத் தேர்வு நடைபெறுகிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தோட்டக்கலை, வேளாண் விரிவாக்கம், மரபியல் - பயிர் இனப் பெருக்கம், உணவியல் - சத்தியல், வேளாண் பொறியியல் உள்ளிட்ட 29 வகையான முதுநிலை படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள சுமார் 400 முதுநிலை படிப்புகளுக்கான இடங்களுக்கு நுழைவுத் தேர்வு அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடத்தப்படுகிறது.

இந்நிலையில், 2015-16 ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு கடந்த 3-ஆம் தேதி அறிவிப்பு வெளியாகி இருந்தது. தேர்வுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க ஜூலை 20-ஆம் தேதி கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மொத்தம் 1,684 மாணவ-மாணவிகள் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர். இவர்களில் 540 பேர் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்.

இதையடுத்து, விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியான மாணவர்களுக்கு மின்னஞ்சல், குறுந்தகவல் மூலம் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டு அனுப்பப்பட்டது. நுழைவுத் தேர்வு, பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 7 இடங்களில் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தொடங்கி நடைபெறுகிறது. தேர்வைத் தொடர்ந்து, இதில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது.

**எழுமாத்தூர் விற்பனைக் கூடத்தில் ரூ. 14 லட்சத்துக்கு வர்த்தகம்**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 14 லட்சத்துக்கு தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 440 மூட்டைகளில், 15 ஆயிரத்து 680 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சம் கிலோ ரூ. 68.55-க்கும் குறைந்தபட்சம் ரூ. 65.65-க்கும், 2-ஆம் தரக் கொப்பரை அதிகபட்சம் கிலோ ரூ. 65.55-க்கும் குறைந்த பட்சம் ரூ. 55.65-க்கும் என மொத்தம் ரூ. 10 லட்சத்து 39 ஆயிரத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது.

இதேபோல, 18 டன் எடையுள்ள 51 ஆயிரத்து 878 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. அதிகபட்சமாக டன் ரூ. 21 ஆயிரத்து 625-க்கும், குறைந்தபட்சமா ரூ. 15 ஆயிரத்து 798-க்கும் என ரூ. 3 லட்சத்து 74 ஆயிரத்துக்கு விற்பனையானது. மொத்தம் ரூ. 14 லட்சத்து 13 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

**துரியன் பழம் சீசன் துவக்கம்**

பர்லியாறு அரசு தோட்டக்கலை பண்ணையில் தற்போது துரியன் பழம் சீசன் துவங்கியுள்ளது. குன்னூர் அருகே உள்ள பர்லியாறு அரசு தோட்டக்கலைப் பண்ணையில் பல்வேறு வகைப் பழ மரங்கள் உள்ளன. இப்பண்ணையில் 31 துரியன் பழ மரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டு தோறும் பிப்ரவரி, மார்ச், ஜூலை ஆகிய மாதங்கள் இதன் சீசன் காலமாகும். குழந்தை இல்லாத பெண்கள் இந்தப் பழத்தைச் சாப்பிட்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் எனக் கூறப்படுவதால் நீலகிரி மட்டுமின்றி தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்தோர் இந்தப் பழத்தை ஆர்வத்துடன் வாங்கிச் செல்வர். இதனால், இப்பழத்திற்கு, அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

மேலும், இங்குள்ள கடைகளில் துரியன் பழம் ஒரு கிலோ ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு தோட்டக்கலைத் துறை பண்ணை மரங்கள் ரூ. 6.50 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டுள்ளன. குறைந்த விலைக்கு துரியன் பழங்களை விற்பனை செய்ய வேண்டுமென தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

**கரும்பில் வேர்ப்புழு தாக்குதலை தடுக்க செயல் விளக்க முகாம்**

கரும்பில் வேர்ப்புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்துவது குறித்து செயல்விளக்க முகாம் ஆரணி அருகே செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆரணியைச் சேர்ந்த சேவூர், முள்ளிப்பட்டு, வெள்ளேரி, மாமண்டூர் ஆகிய கிராமங்களில் கரும்பு பயிர்களில் வேர்ப்புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது. கரும்பில் இந்த நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் கா.ஜெயம் உத்தரவின்பேரில் செயல்விளக்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆரணியை அடுத்த மெய்யூரில் கே.மணி என்பவருக்குச் சொந்தமான தோட்டத்தில் நடைபெற்ற இந்தச் செயல்விளக்க முகாமில், வேர்ப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்துவது குறித்து, கரும்பு அலுவலர் மு.வேலாயுதம் விளக்கிப் பேசியது: கரும்பு நடும் முன் நிலத்தில் உள்ள வேர்ப்புழுக்களின் கூட்டுப்புழுக்களைக் கண்டறிந்து அழிக்க வேண்டும். கடைசி உழவின்போது தொழு உரத்துடன் மீத்தைல் பாரத்தியானை 2 சதவீதம் தூள் மருந்து கலந்து இட வேண்டும். புழுவால் பாதிக்கப்பட்ட வயலில், பூச்சிக்கொல்லி மருந்தான லெமடா-சைகலோத்திரின் 5 சதவீதம், இ.சி 25 மி.லி. மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்த கரைசல் அல்லது குளோரிடைரிபாஸ் 20 இ.சி 2 மி.லி. மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்த கரைசலை கரும்பில் தூர்களைச் சுற்றி குழிகளில் ஊற்ற வேண்டும் என்றார் அவர்.

முகாமில் சர்க்கரை ஆலையின் நிர்வாகக் குழு உறுப்பினர் மு.சின்னத்துரை, கரும்பு அபிவிருத்தி அலுவலர் வி.ஆர்.விவேகானந்தன், கரும்பு உதவியாளர்கள் ஆனந்தன், மதியழகன், கென்னடி, தனபால், கிருஷ்ணமூர்த்தி, மனோகரன், ராஜமன்னார், முன்னோடி விவசாயிகள் ஏ.மணிப்பிள்ளை, கே.மணி, முருகையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எள் ஏலம்**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எள் ஏலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பென்னாகரம், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயனடையும் நோக்கில் செவ்வாய்க்கிழமை தோறும் எள் ஏலம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இதன்படி நடைபெற்ற ஏலத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் கலந்து கொண்டனர். எள் தரத்துக்கேற்ப அதிகபட்சமாக கிலோ ரூ.62.37ம், குறைந்தபட்சமாக ரூ.44 கோரப்பட்டது.

மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குநர் ப.காளியப்பன், விற்பனைக் குழு செயலாளர் எஸ்.சங்கரசுப்பிரமணியன் ஆகியோர் துவக்கி வைத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் நாகராஜன், மேற்பார்வையாளர்கள் கோவிந்தராஜன், முரளிதரன் ஆகியோர் ஏல விற்பனையை நடத்தினர்.

**தருமபுரியில் மிதமான மழை**

தருமபுரியில் செவ்வாய்க்கிழமை பரவலாக மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். வானம் பார்த்த பூமியான தருமபுரி மாவட்டத்தில் பருவமழையை நம்பி விவசாயப் பணிகள் நடைபெறுகிறது. நிகழாண்டில் கோடையில் சுமாரான அளவில் பெய்த மழையை நம்பி மக்காச்சோளம், சோளம் போன்ற பயிர்கள் அதிகளவில்

பயிரிடப்பட்டுள்ளன. ஓரளவுக்கு பயிர்கள் வளர்ந்துள்ள நிலையில் ஒன்றிரண்டு நாள்கள் மழை பெய்தால் விவசாயத்துக்கு பேருதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், செவ்வாய்க்கிழமை அரைமணி நேரத்துக்கு மேல் மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**அரியலூர், பெரம்பலூரில் பலத்த மழை**

அரியலூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அரியலூர் மாவட்டத்தில் கடந்த 10 நாட்களுக்கும் மேல் வெயிலின் தாக்கம் அதிகம் உள்ளது. மீண்டும் கோடை காலம் தொடங்கி விட்டதோ என்று நினைக்கும் அளவுக்கு வெயிலின் உக்கிரம் அதிகமாக இருந்தது.

இதனால் பகல் வேளையில் பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியே வராமல் தவிர்த்தனர். இந்நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை வானத்தில் கரு மேகங்கள் சூழ்ந்தது. தொடர்ந்து இடியுடன் பலத்த மழை கொட்டியது. இதனால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. ஒரு மணி நேரத்துக்கும் மேல் பெய்த இந்த மழையால் அரியலூர் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் இந்த மழை அரியலூர் மாவட்ட டெல்டா பகுதியான தா.பழூர் மற்றும் ஜயங்கொண்டத்தில் பயிரிடப்பட்டுள்ள குறுவை பயிருக்கு மிகவும் உகந்ததாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். பெரம்பலூர் : பெரம்பலூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு பரவலான மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் கோடைகாலம் தொடங்கியது முதல், வெயிலின் தாக்கம் அதிகளவில் இருந்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை காலை முதல் வெயிலின் தாக்கம் சற்று குறைந்து காணப்பட்டது. மாலை 6.30 முதல் 7.30 மணி வரை பரவலாக மழை பெய்தது.

இந்த மழை தொடர்ந்து சுமார் 1 மணி நேரத்துக்கும் மேலாக பெய்ததால், நகரின் பிரதான சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதேபோல, மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் பெய்த மழையால் வெப்பம் தணிந்து குளிர் காற்று வீசியது. இதனால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

**அரியலூரில் பலத்த மழை பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி**

அரியலூரில் செவ்வாய்க்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அரியலூர் மாவட்டத்தில் கடந்த 10 நாட்களுக்கும் மேல் வெயில் கொளுத்தியது, இரண்டாவது கோடை காலம் தொடங்கி விட்டதோ என்று நினைக்கும் அளவுக்கு வெயிலின் உக்கிரம் அதிகமாக இருந்தது, இதனால் பகல் நேரத்தில் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வராமல் தவிர்த்தனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை வானம் கருக்கத்தொடங்கியது, கருமேகங்கள் சூழ்ந்து இடியுடன் பலத்த மழை கொட்டியது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஒரு மணி நேரத்துக்கும் மேல் பெய்த இந்த மழையினால் அரியலூர் பொதுமக்களின் மனம் குளிர்ந்தது.

மேலும் இந்த மழை அரியலூர் மாவட்ட டெல்டா பகுதியான தா.பழூர் மற்றும் ஜயங்கொண்டத்தில் பயிரிடப்பட்டுள்ள குறுவை பயிருக்கு மிகவும் உகந்ததாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

**நாமகிரிப்பேட்டையில் ரூ.65 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

நாமகிரிப்பேட்டையில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் 1,250 மூட்டைகள் ரூ.65 லட்சத்துக்கு ஏலம் போயின.

இந்த ஏலத்தில் நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று

வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை ஏலத்துக்குக் கொண்டு வந்தனர். இதில், தலா 65 கிலோ கொண்ட 1,250 மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. இதில், விரலி ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.10,269-க்கும், குறைந்தபட்சமாக ரூ.7,399-க்கும், உருண்டை ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.7,759-க்கும், குறைந்தபட்சமாக ரூ.6,086-க்கும் ஏலம் போயின. பனங்காலி ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.10,149-க்கும், குறைந்தபட்சமாக ரூ.8,700-க்கும் ஏலம் போயின. மொத்தம் ரூ.65 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றது.

**கோழித்தீவன மூலப்பொருள்களை பரிசோதனை செய்ய அறிவுறுத்தல்**

தீவன மூலப்பொருள்களை பரிசோதனை செய்த பின்னரே பயன்படுத்த வேண்டும் என கோழிப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த மூன்று நாள்களுக்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் மழைத்தூறல் அல்லது லேசான மழை இருக்கும். வானிலை மாற்றம் காரணமாக கோழிகளில் தீவன எடுப்பு இயல்பான நிலையை அடையும். இருப்பினும், தீவன மூலப் பொருள்களை பரிசோதனை செய்த பின்னரே பயன்படுத்த வேண்டும்.

**உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு சிறுதானிய சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி**

புதுக்கோட்டை அருகே குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு சிறுதானியங்கள் சாகுபடி தொடர்பான பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. புதுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற முகாமுக்கு வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) ரெ. சதானந்தம் தலைமை வகித்தார்.

குடுமியான்மலை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் வீரமணி சிறுதானியப் பயிர்களான கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, வரகு, பனிவரகு ஆகியவற்றின் சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்தும், சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டுதல், சிறுதானியப் பயிர்களில் செய்யும் உணவு வகைகள் குறித்து வம்பன் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் கீதா, மத்திய அரசுத் திட்டங்கள் குறித்து வேளாண் இயக்குநர் அலுவலக வேளாண் அலுவலர் (மத்திய திட்டம்) எஸ். ராஜசேகரன், சிறுதானியங்களின் சிறப்புகளை புதுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் வி.எம். ரவிச்சந்திரன் ஆகியோர் விளக்கிப் பேசினர். முன்னதாக, உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் வ. சாந்தி பயிற்சியைத் தொடக்கி வைத்தார். நிறைவில் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் பொ. செல்வி நன்றி கூறினார்.

**அரசு மானியத்துடன் தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம்**

லாபகரமான கால்நடை வளர்ப்புக்கு அரசு மானியத்துடனான தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இதுகுறித்து ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்திருப்பது:

கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நிகழ் நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

இறைவையில் பல்லாண்டு தீவன சோளம் மற்றும் வேலிமசால் தீவனப்பயிர் 0.25 ஏக்கரில் சாகுபடி செய்ய தீவன விதைகள் வழங்குதல் (பயனாளிக்கு அதிகபட்சம் ஒரு ஏக்கர்), மானாவாரியில் 0.25 ஏக்கரில் தீவனச் சோளம் மற்றும் தீவனத் தட்டப்பயறு சாகுபடி செய்ய தீவன விதைகள் வழங்குதல் (பயனாளிக்கு அதிகபட்சம் ஒரு ஏக்கர்).

தெளிப்பு நீர் பாசன கருவிகள் நிறுவ விவசாயிகளுக்கு ரூ. 18,750 (75 சதம்) மானியம் வழங்குதல், மர வகை தீவனத்தின் முக்கியத்துவத்தை

உணர்த்த வெவ்வேல், பூவரசு, கிலைரிசிடியா, வாகை, கல்யாண முருங்கை, வேம்பு, கொடுக்காப்புலி போன்ற மர விதை கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்குதல், மரவகை தீவனப் பயிர் உற்பத்தியைப் பெருக்குதல் மூலம் கோடை, தீவன பற்றாக்குறை காலங்களில் தீவனம் கிடைக்கச் செய்தல், அசோலா திடல் அமைக்க ரூ. 1,600 மானியம் (100 சத மானியம்), தீவனப் பயிர் அதிக அளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து, பயன்படுத்தி, ஊறுகாய் புல்லாக கால்நடைகளுக்குத் தீவனப் பற்றாக்குறைக் காலங்களில் வழங்குவதற்கு 250 கிலோ கொள்ளளவு உடைய 4 பைகள் ஒரு விவசாயிக்கு இலவசமாக வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

விருப்பமுள்ள விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவரை தொடர்பு கொள்ளலாம்.

**வாழைத் தார்களை பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க வலியுறுத்தல்**

வாழைத் தார்களை பாதுகாக்க, ஸ்ரீவைகுண்டம், ஏரலில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டும் என வாழை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாமிரவருணி பாசன வாழை விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் சார்பில், வாழை விவசாயிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு, ஸ்ரீவைகுண்டம் ஒன்றியத் தலைவர் பொன்ராஜ் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலர் சண்முகம், மாவட்டச் செயலர் பெருமாள், மாவட்ட துணைச் செயலர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டப் பொருளாளர் கணபதி வரவேற்றார்.

கூட்டத்தில், கரும்புக்கும், நெல்லுக்கும் அரசு விலை நிர்ணயம் செய்வது போன்று வாழைத் தார்களுக்கும் கிலோ அடிப்படையில் அரசே விலை நிர்ணயம் செய்யவேண்டும்; இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்படும்

வாழைகளுக்குப் பாதிக்குப் பாதி நிவாரணம் வழங்கவேண்டும்; வாழைத் தார்களை பாதுகாக்க ஏதுவாக ஏரல், ஸ்ரீவைகுண்டத்தில் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் ராகவன், ஸ்ரீவைகுண்டம் முன்னாள் பேரூராட்சித் தலைவர் உலகம்மாள், ஒன்றியச் செயலர்கள் கருங்குளம் நம்பிராசன், ஆழ்வார்திருநகரி ராமச்சந்திரன், தாமிரவருணி பாசன விவசாயிகள் பாதுகாப்புக் குழு தலைவர் கந்தசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**குளச்சலில் மீனவர்களுக்கான நவீன பயிற்சி முகாம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு மின்னணு சாதனங்கள் மற்றும் படகு இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் குறித்த பயிற்சியை மீன் துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ் செவ்வாய்க்கிழமை தொடங்கிவைத்தார்.

குளச்சல் மீனவர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி முகாம் தொடக்க விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் என். தளவாய்சுந்தரம், எம்.எல்.ஏ.க்கள் நாஞ்சில் முருகேசன், பிரின்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பயிற்சியை மீன்துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ் தொடங்கிவைத்துப் பேசியதாவது: கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 700 மீன்பிடி விசைப்படகுகளும், 10,000 வள்ளங்களும் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு கடல் சார் மேலாண்மை தொலைத்தொடர்பு சாதனங்களை கையாளுதல் மற்றும் பராமரித்தல், இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்தல், மாநில மற்றும் மத்திய பாதுகாப்பு நிறுவனங்களாகிய இந்திய கப்பற்படை, கடலோர காவல்படை, கடற்படை, காவல்துறை, சுங்கத்துறை உள்ளிட்ட நிறுவனங்கள் ஆய்வு

மேற்கொள்ளும் போது அவர்களிடம் நடந்து கொள்ளும் முறை, காண்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் (படகு பதிவு சான்றிதழ், மீனவர் அடையாள அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம்) குறித்த 5 நாள் பயிற்சி மத்திய கடலியல் பயிற்சி நிறுவன நிபுணர்கள், கடலோர காவல்படையைச் சேர்ந்த அதிகாரிகள், சுகாதாரப் பணியாளர்கள், தமிழ்நாடு மீன் துறை அலுவலர்கள் மற்றும் மீன்பிடிப்பில் அனுபவமுள்ள நபர்கள் மூலம் மீனவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

குமரி மாவட்டத்திலேயே, குறிப்பாக குளச்சல் மீனவர் பயிற்சி நிலையத்திலிருந்து இப்பயிற்சியை வழங்க வேண்டுமென்ற மீனவர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழக முதல்வரின் ஆணைப்படி, மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட குளச்சல் மீனவர் பயிற்சி நிலையத்திலேயே இப்பயிற்சி தொடங்கப்பட்டுள்ளது. இதில், முதல்கட்டமாக 30 பேருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற மீனவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றார் அவர்.

தொடர்ந்து குளச்சல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பொது இ-சேவை மையத்தையும் அவர் திறந்துவைத்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையத் தலைவர் சேவியர் மனோகரன், மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு தலைமை மீனவர் கூட்டுறவு இணையம்) ஆறுமுகம், மத்திய கடலியல் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் சின்ஹா, கடலோர காவல்த்துறை துணைத்தலைவர் நவதீப் ராஜ், துணை இயக்குநர் மோகன், உதவி இயக்குநர்கள் ரூபர்ட் ஜோதி, நபிராஜன், சைமன்காலனி ஊராட்சித் தலைவர் சார்லஸ், வார்டு உறுப்பினர் சகாய வில்சன், பங்குத்தந்தை எட்வின் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## "அவுரி' மூலிகை செடி சாகுபடியில் சத்தமில்லாமல் சாதிக்கும் விவசாயி



மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே டி.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் சோலைபட்டி கிராமத்தை சேர்ந்த விவசாயி பழனி "அவுரி' என்னும் மருத்துவ குணம் கொண்ட மூலிகை செடிகளை ஊடு பயிராக பயிரிட்டு ஆண்டுதோறும் ரூ. 25 ஆயிரம் வரை சத்தமில்லாமல் வருவாய் ஈட்டிவருகிறார்.

அவர் கூறியதாவது: "தூத்துக்குடி சென்னா' என்றழைக்கப்படும் இந்த மூலிகைச் செடிகள் 90 நாட்கள் பயிராகும். ஆண்டுதோறும் பருவ மழையை ஒட்டி நவம்பர் இறுதியில் விதைள் விதைக்கப்படுவது வழக்கம். எக்டேருக்கு 20 கிலோ விதை விதைத்தால் போதுமானது. களை எடுப்பு மற்றும் உரம் போட தேவையில்லை. அதுவாகவே வளர்ந்து பயன்தரக் கூடியது. செடிகள் முழுவதும் மஞ்சள் நிறத்தில் பூ பூத்து, காய்கள் கொத்து கொத்தாக காய்த்து தொங்கும். மல்லிகைக்கு ஊடு பயிராக இந்த

"அவுரி'யை பயிரிட்டுள்ளேன். வறட்சியை தாங்கி விளையக்கூடியது. குறைந்த அளவே தண்ணீர் போதுமானது. எக்டேருக்கு ஒரு டன் வரை காய்ந்த இலைகள் மற்றும் காய்கள் கிடைக்கும். இவற்றை மொத்தமாக சேகரித்து தூத்துக்குடி மொத்த வியாபாரிகளிடம் விற்று விடுவேன். இதனால், விவசாய செலவு போக ஆண்டு தோறும் குறைந்தது 25 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கிறது.

மழை அதிகமாக பெய்தால் "அவுரி' க்கு ஆபத்து. பதினைந்து ஆண்டுகளாக தொடர்ந்து இந்த விவசாயத்தில் ஈடுபட்டுள்ளேன். சோலைபட்டியை சுற்றியுள்ள கெஞ்சம்பட்டி, முத்தப்பன்பட்டி, ஜெகநாதன்பட்டி, புளியம்பட்டி போன்ற கிராமங்களில் இந்த விவசாயம் களை கட்டி வருகிறது, என்றார். "அவுரி' பற்றி அறிய 98437 23681ல் தொடர்பு கொள்ளலாம்.

**-ஆர்.ராஜ்குமார், மதுரை.**

குறைவான முதலீட்டில் அதிக லாபம் தரும் முயல் வளர்ப்பு



முயல்கள் அதிகளவில் இனவிருத்தி செய்யும் தன்மையுடையது. பலதரப்பட்ட தீவனங்களை அதிகளவில் உணவாக எடுத்துக் கொள்வதால், சிறிய தொகையை முதலீடு செய்து முயல்களை வளர்க்கலாம். ஆரம்ப முதலீடு மிகவும் குறைவு. மிக விரைவில் லாபம் கிடைக்கப்பெறும். அதாவது முயல் வளர்ப்பு ஆரம்பித்த 6 மாத காலத்திலிருந்தே பெறலாம். வருமானம் குறுகிய காலத்திலேயே கிடைக்கப் பெறுவதால், கடனை திருப்பி செலுத்துவதும் எளிதாக உள்ளது. உரோமம் மற்றும் எருவிலிருந்தும் வருமானம் கிடைக்கப் பெறுகிறது. முயல்களுக்கு தீவனமாக எளிதில் கிடைக்கும் இலை, தழைகளையும், வீட்டில் வீணாகின்ற காய்கறிகளையும், குறைந்த அளவு தானியங்களையும் கொடுக்கலாம். இறைச்சி முயல்களின் வளர்ச்சி மிக அதிகமாக இருக்கும். இறைச்சி முயல்கள் மூன்று மாத வயதில் 2 கிலோ உடல் எடையை அடைகின்றன. முயல் இறைச்சியில் மற்ற இறைச்சிகளை விட அதிக அளவு புரதச்சத்தும் (21%) குறைந்த அளவு கொழுப்புச்சத்தும் (8%) உள்ளது. அதனால் முயல் இறைச்சி குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அனைவருக்கும் ஏற்றது.
இனங்கள்: சோவியத்சின்செல்லா, சாம்பல் நிற ஜெயிண்ட், நியூசிலாந்து வெள்ளை, வெள்ளை நிற ஜெயிண்ட், அங்கோரா மற்றும் கலப்பு

இனங்கள்.

விற்பனை வாய்ப்புகள்: முயல்களை இறைச்சிக்குப் பயன்படுத்தலாம். உயிர் எடையில் குறைந்த பட்சம் 60 - 70% இறைச்சி கிடைக்கும். முயல் இறைச்சியை உயிருடன் கிலோ ரூ.250 வரை விற்பனை செய்யலாம். இதனை சுத்தம் செய்வதும் மிக எளிது. உபரியான முயல்களை இனவிருத்திக்காக விற்பனை செய்யலாம். முயல் தோலை பதப்படுத்தி, கைவினைப் பொருட்கள் செய்யலாம். இதில் தொப்பி, மேலாடைகள், பர்ஸ், சாவிக் கொத்து, கவர் முக்கியமானவை. முயல் எரு சிறந்த எருவாக கருதப்படுகிறது. இதிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கலாம். சொந்த நிலம், தண்ணீர் வசதி, பசுந்தீவன வசதியுடைய விவசாயிகள், முயல் வளர்ப்பை ஆரம்பித்தால் நிச்சயம் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

முயல் இறைச்சியானது இதர இறைச்சி வகைகளுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் குறைவான கொலஸ்டிரால் கொண்டது. அதாவது 100 கிராம் முயல் இறைச்சியில் 50 மில்லி கிராமே கொலஸ்டிரால் உள்ளது. அதே போல் முயல் இறைச்சியில் உப்புச்சத்தும் மிகவும் குறைவாகவே உள்ளது. அதாவது 100 கிராம் முயல் இறைச்சியில் 40 மில்லி கிராமே சோடியம் எனப்படும் உப்புச்சத்தும் உள்ளது. மேலும் முயல் இறைச்சியில் எளிதில் செரிக்கவல்ல புரதச்சத்துகளையும் கொண்டுள்ளது. நமது அன்றாட உடல் தேவைக்கான கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்களும் தேவையான அளவு முயல் இறைச்சியில் உள்ளன. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து வயதினரும் முயல் இறைச்சியினை எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் முயல் இறைச்சி நல்ல தரமான, எளிதில் செரிக்கவல்ல புரதச் சத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது. குளிர்காலம் மற்றும் கோடை காலம் என எல்லா பருவ காலங்களிலும் முயல் இறைச்சியை உண்ணலாம்.

**- பேராசிரியர்**

**பண்ணை முருகானந்தம்,**

**மதுரை. 94435 57579**

***சின்ன சின்ன செய்திகள்***



**இளநிலை தேங்காய் எண்ணெய் (Virgin Coconut Oil)** : இன்று பரவலாக பேசப்படும் ஒரு தேங்காய் எண்ணெய் "ஆரோக்கியமே வாழ்வு' என்று புரிந்துள்ளவர்கள் இந்த இளநிலை தேங்காய் எண்ணெய் பற்றி தெரிந்து கொள்வது மிகவும் நல்லது. பொதுவாக தேங்காய் எண்ணெய் எடுப்பதற்கு நாம் முற்றிய தேங்காய்களைத் தான் தேர்ந்தெடுக்கிறோம். இளநிலை தேங்காய் எண்ணெய் தண்ணீரைப் போல நிறமற்றதாகவும், பச்சை தேங்காய்க்கு என்ன வாசனை இருக்குமோ - அந்த வாசனை கொண்டதாகவும் இருக்கும். இதில் வைட்டமின் "E' அதிகரிக்கும். Free Fatty Acid மிகக் குறைவாக இருக்கும். மனித உடலில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதால், மருத்துவ ஆராய்ச்சி முடிவுகள் VCOஐ பெரிதும் வரவேற்கின்றன. கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்துகிறது. உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது. சமையல் எண்ணெய்களுக்கு ஒப்பற்ற மாற்று இது. இதயநோய்களுக்கு எதிராக செயல்படுகிறது. HDLஐ அதிகமாக்கி உடலில் தேங்கியுள்ள கொழுப்புகளைக் கரைத்து லிவர் மூலம் வெளியேற்றுகிறது. பச்சைத் தேங்காயிலிருந்து இரண்டு வகைகளில் எண்ணெய் எடுக்கலாம். 1) பால் பிழிந்து, பாலிலிருந்து எண்ணெய் எடுப்பது. 2) பால் பிழியாமல் எண்ணெய் எடுப்பது. இளநிலை தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் போது இயற்கையாக

நடைபெறும் நொதித்தலில் எந்த வெளி இடுபொருட்களும் சேர்க்கப்படுவதில்லை. தேங்காய் பாலானது பொருத்தமான சூழ்நிலையில் 10 மணி நேரம் வைத்திருந்தாலே எண்ணெய் தானாகவே பிரிந்து விடுகிறது. இந்த முறையில் சிறிய அளவில் VCO தயாரிக்கலாம். பெரிய அளவில் VCO தயாரிப்பதினால் மற்ற எல்லா முறைகளையும் விட தேங்காயை பூவாக திருகி, பூவை காய வைத்து (ஈரம் நீக்கி) பிரத்யேகமான மெஷின்களில் பிழிந்து எண்ணெய் எடுப்பது தான் மிகச்சிறந்த முறையாகும். (தகவல் : Er.மது.இராமகிருஷ்ணன், இயற்கை விவசாயி, சந்தோஷ் பார்ம்ஸ், பொள்ளாச்சி- 642 114. அலைபேசி : 94424 16543).

**நிலக்கடலை + செடி முருங்கை கூட்டணி** : விருதுநகர் மாவட்டம், கோட்டூர் இயற்கை விவசாயி ராமமூர்த்தி அவருடைய நிலத்தில் நிலக்கடலையில் ஊடுபயிராக செடி முருங்கை நடவு செய்துள்ளார். பொதுவாக நிலக்கடலையில் ஊடுபயிராக உளுந்து, தட்டைப்பயறு, சூரியகாந்தி என நடவு செய்வார்கள். ஆனால் விவசாயி கொஞ்சம் வித்தியாசமாக முருங்கை நடவு செய்துள்ளார். ஒரு ஏக்கர் நிலத்தில் 90 செடி முருங்கைகளை வைத்துள்ளார். 10 அடிக்கு ஒரு மரம் என்ற அளவில் நடவு செய்துள்ளார். முருங்கைக்கு என்று தனியாக உரம் வைக்கவில்லை. 3 முதல் 4 மாதங்களில் 4 அடி உயரமும், 4 முதல் 5 மாதங்களில் 5 அடி உயரமும், 5முதல் 6 மாதங்களில் 7 அடி உயரமும் வளரும். இந்த காலக்கட்டத்தில் முருங்கையிலுள்ள கொழுந்து பகுதியைக் கிள்ளி விட வேண்டும். 4ம் மாதத்தில் பூ எடுத்து 5ம் மாதத்தில் பிஞ்சுகளாக மாறி 6ம் மாதத்தில் காய்கள் அறுவடைக்கு வந்து விடும். அதில் இருந்து சுமார் 6 மாதத்திற்கு பலன் கொடுக்கும். இதனால் இரட்டிப்பு வருவாய் கிடைக்கிறது. தொடர்புக்கு : கே.ராமமூர்த்தி, 1/739, 10, ஆர்.ஆர்.நகர், விருதுநகர் மாவட்டம். அலைபேசி : 97519 07930.

**சிறு தானிய உணவுகள் :**

சாமை முடக்கத்தான் கீரை தோசை - தேவையான பொருட்கள் : சாமை அரிசி-1 கப், உளுந்து- 1/4 கப், வெந்தயம்-1/4 தேக்கரண்டி, சீரகம்-1/4 தேக்கரண்டி, மிளகு- 1/4 தேக்கரண்டி, முடக்கத்தான் கீரை-1 கப், உப்பு - தேவைக்கேற்ப, எண்ணெய் - தேவைக்கேற்ப

செய்முறை : சாமை அரிசி, உளுந்து, வெந்தயம் மூன்றையும் கழுவி 2 மணி நேரம் ஊற விடவும். முடக்கத்தான் கீரையை சுத்தம் செய்து ஆய்ந்து கொள்ளவும். ஊற வைத்த அரிசி, உளுந்து, வெந்தயத்தை அரைக்கவும். அதனுடன் கீரை, சீரகம், மிளகு, உப்பு சேர்த்து அரைக்கவும். 2 மணி நேரம் கழித்து, தோசைக்கல்லை சூடாக்கி, மெல்லிய தோசையாகச் சுடவும், சட்னியுடன் பரிமாறவும். (தகவல் : திருமதி.கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், S3 B Block, Ponni Apartments, 10/4, Ganapathy 1st Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai-600 041).

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## ரூ.12 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

ஆட்டையாம்பட்டி:எஸ்.பாப்பாரப்பட்டி தொடக்க வேளாண்மை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில், 12 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.சேலம் அடுத்த, எஸ்.பாப்பாரப்பட்டி தொடக்க வேளாண்மை சங்கத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இங்கு, ஆட்டையாம்பட்டி, மின்னக்கல், அரசம்பாளையம், ராஜாபாளையம், மாமுண்டி, மதியம்பட்டி, வெண்ணந்தூர் மற்றும் சுற்றுப்புற விவசாயிகள், தங்கள் விளை நிலங்களில் விளையும் பருத்திகளை, நேற்று, ஏலத்திற்கு கொண்டு வந்தனர்.

இதில், மகுடஞ்சாவடி, ஆத்தூர், சேலம், திருசெங்கோடு ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், பருத்தியை போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். சுரபி பருத்தி ரகம், அதிகபட்சம், மூட்டை, 6,420 ரூபாய்க்கும், குறைந்தபட்சம், 5,870 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 12 லட்சம் ரூபாய் மதிப்புள்ள, 500 மூட்டைகள் ஏலத்தில் விவசாயிகள் எடுத்து சென்றனர்.

இதில், மாவட்ட வேளாண் கூட்டுறவு சங்கம் தலைவர் பழனிசாமி, எஸ்.பாப்பாரப்பட்டி சங்க தலைவர் சுப்பிரமணி, அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்

## விவசாயிகளுக்கு "விஷன்-2050' தொலைநோக்கு திட்டம்

பாட்னா: பிகார் மாநிலம் பாட்னாவில் வரும் ஜூலை 25ல், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் நிறுவன நாள் கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பிரதமர் மோடி, விவசாய தொலைநோக்குத் திட்டமான "விஷன்-2050' திட்டத்தை வெளியிடுகிறார். இத்திட்டம் விவசாய துறையின் எதிர்கால சவால்களை எதிர்கொள்ள, வேளாண் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டது. இதுதவிர விவசாயிகளுக்கான மேலும் 3 புதிய திட்டங்களையும் துவக்கி வைக்கவுள்ளார்.

## 21 ஏக்கரில் மாதவரம் தோட்டக்கலை பூங்கா:இரண்டு மாதத்தில் பணி முடிக்க ஏற்பாடு

சென்னை மாதவரத்தில், பிரம்மாண்டமாக தயாராகி வரும், தோட்டக்கலை பூங்கா பணிகளை, இரண்டு மாதங்களில் முடிக்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. தோட்டக்கலைத் துறை சார்பில், மாநிலத்தின் பல இடங்களில் பூங்காக்கள் உள்ளன. இங்கு, அரியவகை

மலர்கள், மூலிகைச்செடிகள் மட்டுமின்றி, பொழுதுபோக்கு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில், சென்னை மாதவரத்தில், 21.21 ஏக்கரில், பிரம்மாண்ட பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கான பணி, சில மாதங்களுக்கு முன் துவங்கியது. இந்த பூங்காவில், அழகிய மலர் செடிகள், மரங்கள் வளர்க்கப்பட உள்ளன.

உடற்பயிற்சி செய்பவர்களுக்கு தனிப்பாதை, தியானம் செய்பவர்களுக்கு தனி மேடை, உணவகம், சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு சாதனங்கள் உள்ளிட்டவை அமைக்கப்படும். செயற்கை ஏரி மற்றும் அழகிய குளங்களும் இடம் பெற உள்ளன. பறவைகளை கவரும் வகையில், இந்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பூங்கா பணிகளை, இரண்டு மாதங்களில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறக்க திட்டமிடப்பட்டு

உள்ளது.

பொழுதுபோக்கு சாதனங்கள்தோட்டக்கலைத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:சென்னையில், பல இடங்களில் பூங்காக்கள் உள்ளன. ஆனால், ஊட்டி, கொடைக்கானல் போன்று, பிரம்மாண்டமான பூங்கா இல்லை. எனவே, மாதவரத்தில் பிரம்மாண்ட பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. மற்ற பணிகள் ஏற்கனவே முடிந்துவிட்டன. விரைவில், சிறுவர் பொழுதுபோக்கு சாதனங்கள் பொருத்தப்பட உள்ளன.இவ்வாறு, அவர் கூறினார்.-- நமது நிருபர்- -

**உயர் தொழில் நுட்பத்தில் விளைந்த 400 கிராம் கத்தரி:கேரளத்தில் தேவை அதிகரிப்பு**



திண்டுக்கல்:திண்டுக்கல் காய்கறி மகத்துவ மையத்தில் உயர் தொழில் நுட்பத்தில் விளைந்த 400 கிராம் கத்த ரிக்காய்களுக்கு கேரளத்தில் தேவை அதிகரித்துள்ளது.திண்டுக்கல் ரெட்டியார் சத்திரத்தில் காய்கறி மகத்துவ மையம் உள்ளது. இங்கு, இந்தோ - அமெரிக்கன் தொழில் நுட்ப வீரிய ஒட்டு ரக கத்தரி சாகுபடி செய்யப்படுகிறது. அரை ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள இந்த ரக கத்தரிகளுக்கு 'ஜீவா' என தோட்டக்கலைத்துறையினர் பெயரிட்டுள்ளனர். சாதாரண முறையில் வளர்க்கப்படும் கத்தரிக்காய் ஒன்றின் எடை 76 முதல் 84 கிராம் இருக்கும்.

அதுவே வீரிய ரக ஒட்டு விதைக் கொண்டு, உயர் தொழில்நுட்பத்தில் விளைவிக்கப்பட்ட கத்தரிக்காய் 400 கிராம் முதல் 427 கிராம் வரை உள்ளது. கத்தரிக்காய் அதிக சதைப் பிடிப்புடன்

உள்ளது. அதன் உள்ளே குறைந்தளவே விதைகள் இருப்பதால் கேரள மக்களின் உணவில் மிளகுஅரிசி சாதத்திற்கான மசியலிலும், பஜ்ஜியிலும் அதிகம் பயன்படுகிறது. இதனால் கேரளத்தில் ஜீவா ரக கத்தரி தேவை

அதிகரித்து வருகிறது. இதுதவிர வீரிய ரக ஒட்டு கத்தரி வகைகளில் 'சுப்ரியா, 614' உள்ளிட்ட ரகங்கள் காய்கறி மகத்துவ மையத்தில் விளைவிக்கப்படுகின்றன.

இம்மைய உதவி இயக்குனர் சீனிவாசன் கூறியதாவது: ஜீவா (வீரிய ஒட்டு ரகம்) கத்தரிக்காய் 165 நாள் பயிர். நாட்டு கத்தரிக்காய் எடை அதிகளவில் இருக்காது. ஆனால் ஜீவா கத்தரிக்காய் ஐந்து முதல் 6 மடங்கு எடை அதிகமுள்ளது. ஒரு ஏக்கரில் 30 டன் கத்தரிக்காய்கள் கிடைக்கும். இதனால், இந்த சாகுபடி முறையை விவசாயிகள் பின்பற்ற வலியுறுத்தி வருகிறோம், என்றார். கொட்டடப்பட்டி கத்தரிக்கும் மவுசு: மேலும் அவர் கூறியதாவது: கொட்டடப்பட்டி கத்தரிக்காய் புளிக்குழம்பில் ருசியை கூட்டும் தரமிக்கது. அதற்கு மக்கள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளது. எனவே, அந்த கத்தரியை உயர் தொழில் நுட்பத்தில் 'மண் போர்வை (மஞ்சிங் சீட்) மற்றும் சொட்டுநீர் பாசன முறைப்படி பயிரிட முடிவு செய்துள்ளோம். விரைவில் அதற்கான பணிகள் துவங்கும், என்றார்.

## பருவ மழையை எதிர்பார்த்து காத்திருக்கும்தியாகதுருகம் பகுதி பருத்தி விவசாயிகள்

தியாகதுருகம்: மானாவாரி பருத்தி விதைப்பு பணிகளை துவக்க பருவமழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். தியாகதுருகம் பகுதியில் ஆண்டுதோறும் 7 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த இரு ஆண்டுகளாக அளவான மழை பெய்ததால் பருத்தி மகசூல் அமோகமாக இருந்தது. இதனால் பருத்தி பயிரிட்ட விவசாயிகள் கணிசமாக வருவாய் ஈட்டினர். நன்செய் பயிர்கள் கைகொடுக்காத நிலையில் மானாவாரி பருத்தி நல்ல பலனை பெற்று தந்தது. இதையடுத்து இவ்வாண்டு இதன் சாகுபடி பரப்பு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த மே மாதம் பெய்த

கோடை மழை ஈரத்தை பயன்படுத்தி நிலத்தை உழுது களைகளை நீக்கி விதைப்புக்கு தயார்படுத்தி வைத்துள்ளனர்.அதைத்தொடர்ந்து மழை பெய்யாமல் ஏமாற்றி வருவதால் விதைப்பு பணிகளை துவக்க முடியாமல் தாமதமாகி வருகிறது. குறித்த பருவத்தில் விதைத்தால் மட்டுமே பனி காலத்தில் பஞ்சு நனைந்து போகாமல் சேகரிக்க முடியும். பருவம் தப்பிய சாகுபடியால் எதிர்பார்த்த பலனை ஈட்ட முடியாத நிலை ஏற்படும்.விதைப்புக்கு ஏற்ற ஈரத்தன்மை கிடைக்கும் அளவுக்கு மழை பெய்தாலே பருத்தி விதைப்பு பணிகளை முடிக்க ஏதுவாக இருக்கும். இதற்காக மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

## ஆடிப்பட்டம் கை கொடுக்குமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

தர்மபுரி:தென்மேற்கு பருவமழை தொடர்ந்து ஏமாற்றி வருவதால், ஆடிப்பட்டமாவது கை கொடுக்குமா என, விவசாயிகள், எதிர்பார்த்து உழவு பணியை செய்து வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில், ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை, 393.4 மி.மீ., வடகிழக்கு பருவமழை 330.1 மி.மீ., என, சராசரி மழை பெய்ய வேண்டும். பருவமழையை அடிப்படையாக கொண்டு, தர்மபுரி மாவட்ட நீர் ஆதாரங்களில் நீர் சேமிக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் விவசாயம் சுழற்சி முறையில் செய்யப்பட்டு வருகிறது. மேட்டுப்பாங்கான நிலங்கள் அதிகம் உள்ள நிலையில், மானாவாரியில் பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

மாவட்டத்தில், நெல், 27,067 ஹெக்டேர், கரும்பு, 20,324, நிலக்கடலை, 17,069, சூரியகாந்தி, 537, பருத்தி, 11,027, மற்ற பயிர்கள் 43,372 ஹெக்டேரில் பயிர் செய்யப்படுகிறது. இது தவிர, தோட்டக்கலை பயிர்களும், மலர் சாகுபடியும் குறிப்பிட்ட தக்க வகையில் நடந்து வருகிறது.

கடந்த, 2005ம் ஆண்டுக்கு பின், தர்மபுரி மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவுக்கு பருவமழை பெய்யாமல் உள்ளது. குறிப்பாக, கடந்தாண்டில், 30 சதவீத பருவமழை ஏமாற்றியது. இந்தாண்டும் தென்மேற்கு பருவமழை இதுவரை கைகொடுக்காமல் உள்ளது.

ஆடிப்பட்டத்துக்கு வசதியாக, கடந்த காலங்களில் ஜூலை முதல் வாரத்தில், தென்மேற்கு பருவ மழை இருந்தது. இதனால், விவசாயிகள், ஆடிப்பட்டத்துக்காக, தங்களது விவசாய நிலங்களை, பயிர் நடவு செய்ய தயாராக வைத்திருந்து, ஆடிப்பெருக்கு அன்று, பயிர்களை நடவு செய்து வந்தனர்.

ஆனால், இந்தாண்டு, தென்மேற்கு பருவமழை ஜூன் முதல் பெய்யாமல், விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. ஆனாலும், விவசாயிகள், கோடையில், பெய்த மழையின் போது, உழவு செய்த நிலங்களை, ஆடிப்பட்டத்துக்கு, பருவமழை கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில், சில நாட்களாக, மீண்டும் மறு உழவு செய்து வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக, வானம் கருமேகத்துடன் காணப்படுவதுடன், அவ்வப்போது, சாரல் மழை பெய்து வருகிறது. இதனால், இந்தாண்டு, ஆடிப்பட்டம் கை கொடுக்கும் என, விவசாயிகள், நம்பிக்கையுடன், பயிர்களை நடவு செய்ய காத்துள்ளனர்.

இதுகுறித்து, தர்மபுரியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், ஆடிபட்டத்தில், 60 சதவீத அளவு, சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படும். வடகிழக்கு பருவமழை காலத்தில், 40 சதவீதம் சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படும். இந்தாண்டு, ஆடி பட்டம் கை கொடுக்கும் என்ற, நம்பிக்கையில், நிலங்களை நடவுக்கு தயார் செய்து வைத்துள்ளதுடன், தரமான விதைகளையும், நடவு செய்ய வாங்கி வைத்துள்ளோம். சில நாட்களாக, சாரல் மழை பெய்து வருவதால்,

ஆடி பெருக்குக்கு முன், மழை பெய்யும் வாய்ப்புள்ளது. மழை பெய்தவுடன், ஆடிபட்டத்தில், பயிர்களை விதைக்க, விவசாயிகள் தயாராக உள்ளனர்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கிருஷ்ணகிரியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் காலை வழக்கம் போல் வெயில் கொளுத்தியது. மாலை, 6 மணியளவில் சாரலாக பெய்ய துவங்கிய மழை, மிதமான அளவில் கொட்டி தீர்த்தது. குறிப்பாக, பெனுகொண்டாபுரம், போச்சம்பள்ளி, நெடுங்கல், சுற்றுவட்டார பகுதியில் கன மழை பெய்தது. திடீர் மழையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, நெடுங்கல்,12.2 மி.மீ., போச்சம்பள்ளி, 7.4, தளி, 10, ஓசூர், 7, பெனுகொண்டாபுரம்,3.2, கிருஷ்ணகிரி, 2.2, என மொத்தம், 45.80 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**உழவர் மன்றங்கள் துவக்க விழா**

பாபநாசம்:பாபநாசம் அருகே சாலியமங்கலத்தில் உள்ள விவேகானந்தா சமூக கல்வி பயிற்சி மையத்தில், உழவர் மன்றங்களின் தொடக்கவிழா நடந்தது.

விழாவிற்கு, தஞ்சை மாவட்ட நபார்டு வங்கி உதவி பொதுமேலாளர் சுப்ரமணியன் தலைமை வகித்து காவிரி, திறமை, அருவி ஆகிய உழவர் மன்றங்களை துவக்கி வைத்து பேசியதாவது:

விவசாய பணி, மனித சக்தியை நம்பி

இல்லாமல், 60 சதவீதத்திற்கு மேல் இயந்திர சக்தியை நம்பி உள்ளது. இனிவரும் காலங்களிலும் மென்மேல் வளர்ந்து, 100 சதவீத அளவிற்கு இயந்திர மயமாகிடும். அதற்கேற்ப விவசாயிகளும் புதிய நுட்பங்களை கற்றுக் கொண்டு, அதனை செம்மையுற செயல்படுத்தி உற்பத்தியில் சாதனை படைக்க வேண்டும்.

உழவர் மன்றங்களும், அதன் உறுப்பினர்களும் தன்னார்வத்துடன் செயல்பட்டு மத்திய, மாநில அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்களை கேட்டு பெறக்கூடிய ஆற்றல் மிக்க அமைப்பாக செயல்படவேண்டும். ஆண்டுதோறும் விவசாயத்திற்காக, பல்வேறு திட்டங்கள் தீட்டினாலும், நிதி ஒதுக்கீடு செய்தாலும், அதன் பயன், கடைகோடி விவசாயிகளுக்கு சென்றடைவதில் பல தடைகள் உள்ளது. எனவே, இதுபோன்ற அமைப்புகள் இணைப்பு பாலமாக செயலாற்ற வேண்டும், என்றார்.

விவேகானந்தா சமூக கல்வி சங்க செயலர் கண்ணதாசன், சாலியமங்கலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் மாசிலாமணி உள்பட பலர் பங்கேற்றனர்.

**இயற்கை வேளாண்மை கருத்தரங்கம்**

திருவாரூர்:""படித்த இளைஞர்கள், விவசாய தொழிலில் ஈடுபட்டால், அதிக லாபம் கிடைக்கும்," என்று இயற்கை மருத்துவர் சித்தர் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம், குடவாசல் அருகே, மஞ்குடியில் உள்ள சுவாமி தயானந்தா பள்ளியில், இயற்கை வேளாண்மை மற்றும் பழந்தமிழ் நெல் வகைகள் குறித்த கருத்ததிரங்கம் நடைபெற்றது.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு, பள்ளி நிர்வாக அறங்காவலர் ஷீலா தலைமை வகித்தார். ஆடுதுறை நெல் ஆராய்சி நிலையத்தின் இயக்குனர் ரவி, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவிசங்கர், பூச்சியியல் வல்லுநர் செல்வம், இயற்கை வேளாண் வல்லுநர் சித்தர், சுவாமி தயானந்தா கல்லூரி முதல்வர் வாசுதேவன், நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் நெல் ஜெயராமன், இயற்கை உழவர் இயக்கத்தை சேர்ந்த வரதராஜன், அனைத்து விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன் உட்பட பலர் பேசினர்.

இதில், இயற்கை வேளாண்மையில் இளைஞர்களின் பங்கு, என்ற தலைப்பில் இயற்கை மருத்துவர் சித்தர் பேசியதாவது:இயற்கை விவசாயத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் அரிசி, கீரை, சிறுதானியம் போன்ற பொருட்கள், மனிதன் உயிரை காக்க கூடியவைகளாக உள்ளன. பாலீஸ் போட்ட அரிசியும், வெள்ளை நிறத்தில் உள்ள சர்க்கரையும் தான் மனிதனுக்கு அனைத்து நோய்களையும் ஏற்ப்படுத்தி விடுகிறது. மாப்பிள்ளை சம்பா என்று அழைக்கப்படும் நெல் வகை மனிதனுக்கு ஏற்படும் பக்கவாதம், நரம்பு தளர்ச்சி போன்ற நோய்கள் வராமல் காக்கும் குணம் கொண்டவை. இதே போல் கருங்குறுவை எனப்படும் நெல்வகை சர்க்கரை நோய், புற்றுநோய், யானைக்கால் நோய், தோல்நோய் போன்ற நோய்கள் வராமல் கட்டுப்படுத்தும் குணம் கொண்டவை. இதே போல் பூங்காலி, கருப்பு தோணி உட்பட பல்வேறு மருத்துவ குணம் கொண்ட நெல் ரகங்களை உபயோகித்து நோய்கள் வராமல் காத்துக் கொள்ளலாம்.

மேலும், கைகுத்தல் அரிசியில், சத்து அதிகமாக உள்ளது. இதே போல், விலை மலிவாக கிடைக்கும் கத்தரிக்காய்களிலும் சத்து அதிகமாக இருப்பதால், அதனை சாப்பிட்டால், அரிப்பு ஏற்படும் என்ற மூட நம்பிக்கையை மக்கள் கைவிட வேண்டும். பூச்சி கொல்லி மருந்துக்கு மானியம் அளிக்கும் அரசுகள், உயிரை காக்கக்கூடிய கைக்குத்தல் அரிசி,

வெல்லம் போன்ற பொருட்களுக்கு மானியம் வழங்க முன் வராதது வருத்தம் அளிக்கிறது.வேளாண் துறையை மத்திய, மாநிலஅரசுகள் அதிக அளவில் ஊக்குவித்தால், இந்தியாவில் உள்ள மக்கள் தொகையை விட கூடுதலாக, 120 கோடி பேருக்கு வேலை வாய்ப்பை அளிக்கும் துறையாக வேளாண்துறை அமையும். மேலும், அதிக லாபம் ஈட்டவும், இயற்கை விவசாயத்தின் மூலம், உயிரை காக்க கூடிய விவசாய பொருட்களை உற்பத்தி செய்யவும் படித்த இளைஞர்கள், விவசாய தொழிலில் ஈடுபட முன்வர வேண்டும்.இவ்வாறு, அவர் பேசினார்.

விழாவில், இயற்கை விவசாயம் குறித்த நூல் வெளியிடப்பட்டது. மேலும் பழந்தமிழ் நெல் வகைகள், இயற்கை விவசாயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் போன்றவை, கருத்தரங்க வளாகத்தில் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளி அறங்காவலர்கள் பாஸ்கர், ராஜகோபால் மற்றும் அலுவலர்கள் செய்தனர்.

**தேங்காய் இறக்குமதியை கட்டுப்படுத்த வலியுறுத்தல்**

தேங்காய் இறக்குமதியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தஞ்சாவூரில் இந்தச் சங்கத்தின் மாநிலக் குழுக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. தமிழகத்தின் நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஆகஸ்ட் மாதம் மாநில அளவில் பிரசார பயணமும், ஆகஸ்ட் மாத இறுதியில் விவசாயிகள் மாநாடும் தஞ்சாவூரில்

நடைபெறுகிறது. இதற்கான பிரசார பயணத்தில் பங்கேற்கவும், மாநாட்டை சிறப்பாக நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

தேங்காய் இறக்குமதி அதிகரிப்பு உள்பட பல பிரச்னைகளால், தேங்காய் விலை சரிந்து வருவதால் விவசாயிகளுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே தேங்காய் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி, குவிண்டால் கொப்பரைக்கு ரூ. 100 என விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. துரை. பிச்சையப்பா தலைமை வகித்தார். சங்கத்தின் மாவட்டச் செயலர் பா. பாலசுந்தரம், நிர்வாகிகள் பி. கருணாமூர்த்தி, ஏ. கலியபெருமாள், ஏ.எம். ராமலிங்கம், பி. கல்யாணசுந்தரம், டி. ரவி, நா. கணேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**பாரத ஸ்டேட் வங்கி சார்பில் வட்டி தள்ளுபடி முகாம்**




பாரத ஸ்டேட் வங்கி சார்பில் வட்டி தள்ளுபடி முகாம் நாளை நடக்கிறது. வட்டி தள்ளுபடி முகாம் : பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல வாணிப அலுவலகம் சார்பில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட விவசாயகடன், கல்விகடன்(நகைகடன் நீங்கலாக) வசூல் மற்றும் குறிப்பிட்ட கடன்களுக்கு வட்டி தள்ளுபடி முகாமான ஒருமுறை தீர்வு முகாம் தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் காரைக்கால் மாவட்டங்களில் உள்ள அனைத்து பாரத ஸ்டேட் வங்கிகளிலும் நாளை(வியாழக்கிழமை) நடக்கிறது. பாரத ஸ்டேட் வங்கியில் கல்விகடன், விவசாயகடன் பெற்று செலுத்தப்படாமல் உள்ள கடன்களில் பெரும்பகுதியான வட்டி தள்ளுபடி செய்து கொள்ள கடன்காரர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு ஆகும். எனவே கடன் பெற்றவர்கள் தாங்கள் கடன் பெற்ற வங்கியை உடனே அணுகி,

இந்த ஒருமுறை தீர்வு மூலம் பயன்பெறலாம். வீட்டுகடன் மேளா மேலும் பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல வாணிப அலுவலகம் சார்பில் வருகிற 24-ந்தேதி(வெள்ளிக்கிழமை) தஞ்சை, திருவாரூர், நாகை மற்றும் காரைக்கால் ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து பாரத ஸ்டேட் வங்கி கிளைகளிலும் வீடு மற்றும் கார் கடன் மேளா நடக்கிறது. மிக குறைந்த வட்டியும், மிக குறைந்த மாத தவணையும் அடிப்படையில் கடன் வழங்க இருக்கிறோம். எனவே பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள கிளைகளை அணுக வேண்டும். மகளிருக்கு சிறப்பு சலுகையாக குறைந்த வட்டியில் கடன் வழங்க இருக்கிறோம். மேலும் மற்ற வங்கிகளில் இருந்து பெற்ற கடனை பாரத ஸ்டேட் வங்கிக்கு மாற்றி கொள்ளும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. அப்போது அவர்களுக்கு பரிசீலனை கட்டணம் கிடையாது என்று தஞ்சை பாரத ஸ்டேட் வங்கியின் மண்டல மேலாளர் சதாசிவம் தெரிவித்தார்.

## சூரிய ஒளி மூலம் இயங்கக்கூடிய கூடார உலர்த்தி அமைக்கும் திட்டம் கலெக்டர் வெங்கடாசலம் தகவல்



தேனி

சூரிய ஒளி மூலம் இயங்கக்கூடிய கூடார உலர்த்தி அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்து உள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–

சூரிய கூடார உலர்த்தி

வேளாண்மை பொறியியல் துறை சார்பில் சூரிய ஒளி மூலம் இயங்ககக்கூடிய சூரிய கூடார உலர்த்தி அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. 2015–16–ம் நிதியாண்டில் தேனி மாவட்டத்திற்கு 7 இடங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்கள் மானிய சலுகையில் இந்த கூடார உலர்த்தியை பெற்று பயன்பெறலாம். இத்திட்டத்தின் மூலம் 400 சதுர அடியில் தட்டுகள் மற்றும் தள்ளுவண்டி இல்லாமல் கூடாரம் அமைக்க மொத்தம் சுமார் ரூ.2 லட்சத்து 41 ஆயிரம்

செலவு ஆகும். இதில் 50 சதவீதம் மானியம் போக விவசாயிகள் சுமார் ரூ.1 லட்சத்து 21 ஆயிரம் செலுத்த வேண்டும்.

அதே 400 சதுர அடியில் தட்டுகள் மற்றும் தள்ளுவண்டியுடன் கூடாரம் அமைக்க ரூ.3 லட்சத்து 68 ஆயிரம் செலவு ஆகும். இதில் 50 சதவீதம் மானியம் போக ரூ.1 லட்சத்து 84 ஆயிரம் செலுத்தி விவசாயிகள் இந்த திட்டத்தில் பயன்பெறலாம். இத்திட்டத்தில் 50 சதவீதம் மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1 லட்சத்து 84 ஆயிரம் வரை மானியம் வழங்கப்படும்.

உலர்த்தும் பொருட்கள்

இதில் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் தரமான பாகங்களை கொண்டு சூரிய சக்தியின் மூலம் பொருட்கள் உலர்த்தப்படுகின்றன. இந்த கூடாரம் மற்றும் சூரிய வெப்பக்காற்று உபகரணம் அதிக அளவில் இந்தியா முழுவதும் பல்வேறு வகையான பொருட்களை உலர்த்த பயன்படுகிறது. அதில் வாசனை திரவியங்கள், பழங்கள், காய்கறிகள், முந்திரிப்பருப்பு, நெய், காப்பிக்கொட்டை, தோல், தேயிலை, மண்பாண்டம், புகையிலை பொருட்கள், மரங்கள், ரப்பர், ரசாயன பவுடர் போன்ற பல்வேறு பொருட்களை உலர்த்தலாம். இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்கள் முன்வர வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு தேனி, ஆண்டிப்பட்டி, பெரியகுளம், மயிலாடும்பாறை வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் தேனி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரையும், கம்பம், சின்னமனூர், போடி, உத்தமபாளையம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் உத்தமபாளையம் உதவி செயற்பொறியாளரையும் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

தினகரன்

**காய்கறி சாகுபடிக்கு...**



விவசாயிகள் காலிங்கராயன் கூறுகையில், பாசனத்திற்கு வழக்கமான ஜூன் மாதம் தண்ணீர் திறப்பது வழக்கமாகும். ஆனால், கடந்த 2 ஆண்டுகளாக பராமரிப்புபணிகள் நடைபெற்று வருவதால் தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டுக்கான தண்ணீர் கடந்த 3ம் தேதி திறக்கப்பட்டது. வழக்கமாக ஜூன் மாதம் நாற்றாங்கால் அமைக்கப்பட்டு ஜூலையில் நெல் நடவு செய்யப்படும். இதனால் பருவமழை பாதிப்பு உள்ளிட்டவைகளில் இருந்து நெற்பயிர்கள் பாதிப்பு இல்லாமல் இருந்து வந்தது. இந்நிலையில் ஜூலை மாதம் தண்ணீர் திறப்பதால் அறுவடைக்கு சில வாரங்களுக்கு முன்பாக பருவமழையில் நெற்பயிர்கள் சிக்கி அழுகல், நெல்லில் முளைப்பு வருதல் உள்ளிட்ட பாதிப்பு ஏற்படுவதால் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை உள்ளதோடு நெல்லுக்கு கட்டுபடியாகாத விலையும் இருந்து வருவதால் தற்போது காலிங்கராயன் பாசன விவசாயிகளின் கவனம் காய்கறி சாகுபடி மீது திரும்பி உள்ளது. ஈரோடு வைராபாளையம், கோணவாய்க்கால் உள்ளிட்ட பாசன பகுதி விவசாயிகள் தற்போது நெல் நாற்றுகள் நடுவதற்கு பதிலாக தக்காளி, கத்திரி, வெண்டை, புடலை உள்ளிட்ட காய்கறி சாகுபடிக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

**மலிவு விலை காய்கறி கடைகளில் புகார் பெட்டி: அமைச்சர் உத்தரவு**




சென்னை: கூட்டுறவு துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மருந்தகங்கள் மற்றும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின் செயல்பாடுகள் குறித்து கூட்டுறவு துறை அமைச்சர் செல்லூர் ராஜு சென்னையில் நேற்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் அமைச்சர் செல்லூர் ராஜு பேசியதாவது: தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வரும் 100 அம்மா மருந்தகங்கள் மற்றும் 195 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் ரூ.165.86 கோடிக்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று, தமிழகத்தில் மொத்தமுள்ள 58 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 96,26,401 கிலோ காய்கறிகள் ரூ.27.58 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வது தொடர்பாக மக்களின் கருத்துக்களையும், ஆலோசனை மற்றும் புகார் தெரிவிக்கும் வகையில் அனைத்து பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் அம்மா மருந்தகங்களில் ஆலோசனை பெட்டிகள் வைக்க வேண்டும் என்றார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திண்டுக்கல், : மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 24ம் தேதி நடைபெற உள்ளது. கலெக்டர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெற உள்ள இக்கூட்டத்திற்கு பல்வேறு துறை உயர்அலுவலர்கள் பங்கேற்க உள்ளனர். எனவே விவசாயிகள் விவசாயம் தொடர்பான புகார்கள், ஆலோசனைகளை தெரிவிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.மழை காலங்களில்

**ஆடுகளை தாக்கும் நோய் காக்கும் வழிமுறைகள்**

பழநி, : மழைக்காலங்களில் ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோய்களில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். செம்மறி ஆடுகளில் பெரும் இழப்பை உண்டு பண்ணும் நோய்களில் நீல நாக்கு நோய் முக்கியமாக கருதப்படுகிறது. இந்நோய் எல்லா ஆடுகளுக்கும் வரும் என்றாலும், செம்மறி ஆடுகளில் தான் அதிக பாதிப்பை ஏற்படுத்தும். மழைக்காலங்களில் கூலிகாய்ட்ஸ் என்ற பூச்சிகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதால் இந்நோய் தாக்குதல் ஏற்படுகிறது. இந்நோய் ஒருவகை நச்சுயிரிகளால் செம்மறி ஆடுகளில் உருவாகிறது.

வெள்ளாடுகளை இக்கிருமி தாக்கினாலும், நோயின் தீவிரம் செம்மறி ஆடுகளில் இருப்பது போன்று அதிகமாக இருக்காது. நோயுற்ற ஆடுகள் உடல் வெப்பநிலை உயர்ந்து அவை நடுக்கத்துடன் காணப்படும். 105 டிகிரி பாரன்ஹீட் முதல் 107 டிகிரி பாரன்ஹீட் வரை இருக்கும். மூக்கின் வழியே தண்ணீர் போன்ற திரவம் ஒழுகும். நாசித்துவாரங்கள் அடைத்து மூச்சுவிட சிரமப்படும். வாயின் உட்பகுதி, ஈறுகள், நாக்கு, நாசி துவாரங்களின் உட்பகுதிகளில் புண்கள் காணப்படும். நாளடைவில் நாக்கில் வீக்கம் ஏற்பட்டு வாயின் வெளிப்பகுதியில் நீண்டு நீலநிறமாக மாறிவிடும். பாதிக்கப்பட்ட

ஆடுகளில் ரத்த கழிச்சலும் காணப்படும். இந்நோய் தாக்கினால் 70 சதவீதம் வரை இறப்பு நேர வாய்ப்புள்ளது. குணமாக்கும் முறை: நோய் கண்ட ஆட்டினை தனியே பிரித்து நன்றாக பராமரிக்க வேண்டும். மேய்ச்சலுக்கு விடக்கூடாது. தீவனம் உண்ணமுடியாத நிலை இருப்பதால் அரிசி, கம்பு, கேழ்வரகு ஆகியவற்றின் கஞ்சியினை நீர் ஆகாரம் போன்று தரவேண்டும். வாய், நாக்கு மற்றும் கால்களில் ஏற்பட்டுள்ள புண்களை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் அல்லது சாதாரண உப்பு கரைசல் கொண்டு நன்றாக கழுவவேண்டும். புண்களுக்கு போரிக் ஆசிடி மருந்தினை வேப்ப எண்ணெயில் கலந்து தடவவேண்டும். 100 மி.லி. கிளிசரினில் 10 கிராம் போரிக் ஆசிட் பவுடரை கலக்கி வாயில் உள்ள புண்களுக்கு தடவ வேண்டும். ஊசி மூலம் நோய் பரவும் என்பதால், ஊசிகள் மூலம் மருந்து அளிக்க கூடாது. கால்நடை டாக்டர்களின் ஆலோசனைப்படி சல்பா, டெட்ராசைக்ளின் போன்ற மருந்தினை 3 நாட்களுக்கு தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

**இலவச ஆடு வழங்க விண்ணப்பம் விநியோகம்**

க.பரமத்தி, : இலவச ஆடு வழங்கும் திட்டத்திற்கு பயனாளிகளை தேர்வு செய்ய சிறப்பு கிராம சபை கூட்டத்தில் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.

க.பரமத்தி ஒன்றியம் தும்பிவாடியில் மாரியம்மன் கோயில் முன்பு நடந்த கிராமசபை கூட்டத்திற்கு கால்நடை உதவி இயக்குனர் (பொ) ராஜேந்திரன் தலைமை வகித்தார். முடிகணம் கால்நடை மருத்துவர் மணிகண்டன் வரவேற்றார். ஊராட்சிதலைவர் நாகமணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முடிகணம் கால்நடை மருத்துவர் மணிகண்டன் பேசுகையில், இலவச

ஆடு வழங்கும் திட்டத்திற்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிப்போர் குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இருக்க கூடாது. நிலம் இல்லாத மிகவும் ஏழைகள் மட்டுமே தகுதியானவர்கள் என்றார்.

ஒன்றிய கவுன்சிலர் பொன்சரவணன் பங்கேற்று விண்ணப்பங்களை வழங்கி துவக்கி வைத்து பேசுகையில், விண்ணப்பங்களை பெற்ற தகுதி வாய்ந்த பயனாளிகள் வரும் 24ம்தேதி மாலை 4மணிக்குள் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பூர்த்தி செய்து வழங்க வேண்டும். அதற்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளபடப்மட்டாது என கிராம சபையில் பங்கேற்றவர்களிடத்தில் தெரிவித்தார். துணைத்தலைவர் சுதா, வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 100க்கும் மேற்பட்டோர் விண்ணப்பங்களை பெற்று கொண்டனர். இதேபோல தென்னிலை தெற்கு ஊராட்சியிலும் கிராமசபை நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

**மாதூர் அரசு விதை பண்ணையில் விதை நெல் விற்பனை துவக்கம்**

காரைக்கால், : காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தின் அரசு விதைப் பண்ணையில் சம்பா, தாளடி விதை நெல் விற்பனை துவங்கியுள்ளதாக கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து காரைக்கால் மாவட்ட கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பயிர் சாகுபடியில் சரியான ரக தேர்வும் அவற்றின் தரமான விதைகளுமோ மகசூலை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன். இதனை கருத்தில் கொண்டு புதுச்சேரி அரசின் வேளாண்துறை, மாதூரில் உள்ள அரசு விதைப் பண்ணையில், மண்ணிற்கு ஏற்ற பயிர் ரகங்களின் தரமான விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கி வருகிறது. இதற்காக வேளாண் பல்கலைக் கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து விதைகள் தருவிக்கப்பட்டு பண்ணையில் பயிரிட்டு,

ஆதார நிலை விதைகளும், அவற்றிலிருந்து அடுத்த தலைமுறையில் சான்று நிலை விதைகளும் விளைவிக்கப்படுகின்றன. பண்ணை வளாகத்தில் உள்ள விதை சுத்தகரிப்பு நிலையத்தில் நல்விதை பிரிக்கப்பட்டு, புதுச்சேரி விதை சான்றளிப்பு முகமையால் தர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விதை மூட்டைகளில் சான்று அட்டைகள் பொருத்தப்படுகின்றன. வருகிற சம்பா, தாளடி பட்டத்திற்கேற்ற நெல் ரகங்களின் சான்று விதைகள் மேற்கண்ட பண்ணையில் நேரடி விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. சாவித்திரி (சிஆர்1009), ஆடுதுறை50, ஆடுதுறை49, ஆடுதுறை39, நெல் ரகங்களின் ஆதார நிலை விதை (வெள்ளை நிற அட்டை) கிலோ ரூ.34, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னியின் ஆதார நிலை விதை கிலோ ரூ.46 மற்றும் ஆடுதுறை 46 ரக சான்று நிலை விதை (நீலநிற அட்டை) கிலோ ரூ.20க்கு விற்பனை செய்யப்படுகிறது. காரைக்கால் மாவட்ட விவசாயிகள் தங்களுக்கு தேவையான தரமான விதைகளை பெற்று பயனடையலாம் என்று தெரிவித்துள்ளார்.

தினபூமி

**அம்மா மருந்தகங்களில் ரூ 165.86 கோடி: பசுமை பண்ணை காய்கறி விற்பனை ரூ 27 கோடி: கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ தகவல்**

சென்னை: முதல்வர் ஜெயலலிதா தொடங்கிவைத்த அம்மா மருந்தகங்கள் மூலம் உயிர் காக்கும் மருந்துகள் ரூ 165.86 கோடிக்கும் பசுமை பண்ணை காய்கறி கடைகளில் ரூ 27.58 கோடிக்கும் காய்கறிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கூட்டுறவு அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்துள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா ஆணைக்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் கே.ராஜூதலைமையில், சென்னை தலைமைச் செயலகத்தில்கூட்டுறவுத்துறையின் மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் சேவைதிட்டங்களான அம்மா மருந்தகங்கள் மற்றும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின்செயல்பாடுகள் குறித்து கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.அம்மா மருந்தகங்களின் விற்பனை குறியீடு, மருந்துகளின் இருப்பு, மருந்துகள் கொள்முதல்,பொதுவான மென்பொருள் நிறுவுதல் மற்றும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுக்குமக்களிடையே உள்ள வரவேற்பு குறித்த விரிவான ஆய்வுக்குப் பின்னர் அம்மா மருந்தகங்கள் மற்றும்பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளின் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்துதல் தொடர்பான உயர்அலுவலர்களுடனான ஆலோசனையின்போது அமைச்சர் செல்லூர் கே.ராஜூ கூறியதாவது.

முதல்வர் ஜெயலலிதா தொலைநோக்கு பார்வையுடன், அனைத்து தரப்பு மக்களும்குறைந்த விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையில் அம்மா மருந்தகங்கள்திறக்கப்படும் என அறிவித்து திறந்துவைக்கப்பட்டது.அம்மா மருந்தகங்களுடன் தற்போது செயல்பட்டுவரும் 100 அம்மா மருந்தகங்கள் மற்றும் 195கூட்டுறவு மருந்தகங்கள் வாயிலாக 15 சதவிகிதம் வரையிலான தள்ளுபடியில் தரமான மருந்துகள்பொதுமக்களுக்கு வழங்கி சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அதன்படி தற்போது 14.7.2015 வரைரூ.165.86 கோடிக்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று, வெளிச்சந்தையில் காய்கறி விலையினை கட்டுப்படுத்தும் வகையிலும், ஏழை எளியநடுத்தர மக்கள் தரமான காய்கறிகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறும் வகையிலும்,இடைத்தரகரின்றி விவசாயிகளையும், நுகர்வோர்களையும் இணைக்கக்கூடிய மக்கள் சேவை திட்டமாக பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளை முதல்வர் ஜெயலலிதா துவக்கி வைத்தார். தற்போது 2 நடமாடும் பண்ணை பசுமை

நுகர்வோர் கடைகள் உட்படதமிழகத்தில் மொத்தம் 58 கடைகள் மூலம் சந்தை விலையைவிட குறைந்த விலையில் தரமா

காய்கறிகளை விற்பனை செய்து சிறப்பாக மக்கள்சேவையாற்றி வருகின்றன. இக்கடைகள் மூலம் 16.7.2015வரை 96,26,401 கிலோ காய்கறிகள் ரூ.27.58 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பண்ணை பசுமை நுகர்வோர் கடை மற்றும் திருநெல்வேலிமாவட்டத்தில் உள்ள அம்மா மருந்தகம் ஆகியவை தினமும் தலா ரூ.1.50 இலட்சம் அளவிற்கு விற்பனைசெய்து வருகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பண்ணை பசுமை நுகர்வோர் கடையின்மூலம் தினமும் சராசரியாக 800 வாடிக்கையாளர்களுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்மாமருந்தகம் மூலம் சராசரியாக தினமும் 400 வாடிக்கையாளர்களுக்கும் இலாபநோக்கின்றி மக்கள்சேவையாற்றிவருவது பாராட்டுக்குரியது. அக்கடைகளின் விற்பனையை இலக்காக கொண்டு தமிழகத்தில்அனைத்து அம்மா மருந்தகங்கள் மற்றும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் சிறப்பாக மக்கள்சேவையாற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இத்திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வதுதொடர்பாக மக்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்றிடும் வகையில் அனைத்துபண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் அம்மா மருந்தகங்களில் ஆலோசனைப்பெட்டிகள் வைக்கவேண்டும். மக்கள் சேவை திட்டங்களாக செயல்பட்டு வரும் இத்திட்டங்களை எவ்விதபுகார்களுக்கும் இடம் அளிக்காமல் சிறப்பாக செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்என அமைச்சர் செல்லூர் கே.ராஜூ கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர்.சிவ்தாஸ் மீனா,, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஜெயஸ்ரீமுரளிதரன்,கூட்டுறவுச் சங்கங்களின்

கூடுதல் பதிவாளர்ஆனந்த் மற்றும்கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**காவிரியில் 25 ஆயிரம் கனஅடி நீர் திறப்பு_: தமிழக விவசாயிகள் மகிழ்ச்சி__**

கர்நாடகாவில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருவதால், கிருஷ்ணராஜசாகர், கபினி உள்ளிட்ட அணைகளில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 25 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காவிரியின் குறுக்கே உள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய அணைகளில் இருந்து அதிக அளவில் நீர் திறக்கப்பட்டுள்ளதால் தமிழகத்துக்கு வினாடிக்கு 25 ஆயிரம் கனஅடி நீர் வந்துகொண்டிருப்பதாக காவிரி நீர் நிர்வாக ஆணையம் தெரிவித் துள்ளது.

இதனிடையே அடுத்த 48 மணி நேரத்துக்கு கர்நாடகாவின் பல இடங்களில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதனால் காவிரியில் தமிழகத்துக்கு திறந்து விடப்படும் நீரின் அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் தமிழக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.___

**கர்நாடகத்தில் ஒரே நாளில் 3 விவசாயிகள் தற்கொலை_**

கர்நாடக மாநிலத்தில் கடந்த நான்கு மாதங்களில் கடன் தொல்லை, வறட்சி, இயற்கை பேரழிவு உள் ளிட்ட பல்வேறு காரணங்களால் 70-

க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். இதனை கண்டித்து எதிர்க்கட்சிகளும், விவசாய சங்கங்களும் போராட்டம் நடத்தி வருகின்றன.

இந்நிலையில் தும்கூர் மாவட்டம், ஹொன்னகவுடன தொட்டி கிராமத்தை சேர்ந்த ராஜூ (30), ஹாசன் மாவட்டம், ஜவாரிகொப்பலு கிராமத்தை சேர்ந்த சந்திரகவுடா (45), ஹாவேரி மாவட்டத்தை சேர்ந்த நாகப்பா (48) ஆகியோர் கடன் தொல்லை காரணமாக நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டனர்.

விவசாய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்க்கட்சி களும், விவசாய சங்கங்களும் கோரிக்கை விடுத்துள்ளன.___